**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**

## நான்கு வருட முன் சேவை கல்விமாணி (ஆங்கில மொழிமூலம்) பட்டத்தைத் தொடர்வதற்காக, 2024 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/தரம்) பெறுபேறுகளின் அடிப்படையில் 210 ஆசிரிய பயிலுநர்களை குளியாப்பிட்டிய, தொழில்நுட்பவியலுக்கான தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அனுமதித்தல் - 2026

1.0 தொழில்நுட்பவியலுக்கான தேசிய கல்வியியற் கல்லூரியில் நான்கு வருட முன் சேவைக் கல்விமாணி (ஆங்கில மொழிமூலம்) பட்டத்தைத் தொடர்வதற்காக ஆட்சேர்ப்பதற்கு அவசியமான கல்வித் தகைமைகள் மற்றும் தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றி, 4.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று (03) பிரதான பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

1.2 ஒரு விசேட சந்தர்ப்பமாகக் கருதி, “மூன்று வருட முன் சேவை தேசிய போதனாவியல் டிப்ளோமா பாடநெறியைத் தொடர்வதற்காக 2024 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்) பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரிய பயிலுநர்களை தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்குச் ஆட்சேர்த்தல் - 2025” எனும் தலைப்பில் 2025.11.07 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் தகைமைகளுக்கு அமைய விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களும் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

1.3 அனைத்து விண்ணப்பதாரர்களும் நிகழ்நிலை முறைமையினூடாக (Online System), வர்த்தமானி அறிவித்தலின் 9.0 இல் உள்ள “விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள்” எனும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விண்ணப்பித்தல் வேண்டும்.

1.4 வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 2026/06/10 திகதி வரை விண்ணப்பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் நன்கு வாசித்து புரிந்துகொண்டு, அதற்கமைய நிகழ்நிலை (Online) ஊடாக விண்ணப்பிக்கும் பொறுப்பு விண்ணப்பதாரரைச் சார்ந்ததாகும். உரிய காலப்பகுதிக்குள் சரியாகச் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாகப் பின்னர் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

1.6 விண்ணப்பிப்பதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலின் 12.0 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வாறு, ஒவ்வொரு பாடநெறிக்கும் 2024 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்) பெறுபேறுகளின் அடிப் படையில் ஆட்சேர்க்கப்படவுள்ள விண்ணப்ப தாரர்களின் எண்ணிக்கை குறித்து விசேட கவனம் செலுத்தி, மாவட்ட அடிப்படையிலும் தேசிய அடிப்படையிலும் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை குறித்துத் தெளிவான புரிதலைப் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்.

### 2.0 தகுதிகள்

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் -

2.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2.2 நற்பண்புகளைக் கொண்டவராகவும், சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
2.3 2026.01.01 ஆம் திகதியன்று 25 வயதிற்கு மேற் படாதவராக இருத்தல் வேண்டும்.
2.4 திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

### 3.0 அடிப்படை கல்வித் தகைமைகள்:

3.1 பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் கல்வியியல் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்காகக் கீழே தரப் பட்டுள்ள 3.2 மற்றும் 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.

3.2 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் 4.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று (03) பிரதான பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

3.3 விண்ணப்பதாரர்கள் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் மொழி (சிங்கள மொழி / தமிழ் மொழி) மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியுடன், மூன்று (03) பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பது கட்டாயமாகும். இத்தகைமைகளை இரு அமர்வுகளில் பூர்த்தி செய்வதாயின், பரீட்சைக்குத் தோற்றிய முதல் அமர்வில் மொழி (சிங்கள மொழி / தமிழ் மொழி) உட்பட ஐந்து (05) பாடங்களில் சித்தியுடன், மூன்று (03) திறமைச் சித்திகளைப் பெற்றிருப்பது கட்டாயமாகும். அத்துடன், க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆங்கில மொழி அல்லது ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு ஆகக்குறைந்தது ஒரு சாதாரண சித்தியையாவது பெற்றிருப்பது கட்டாயமாகும்

3.4 ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான விசேட தகைமைகள் அந்தந்த பாடநெறிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

**கருத்தில் கொள்க**:

(அ) க.பொ.த. (சாதாரண தர) பாடத்திட்டத்தின் கீழ் பின்வரும் பாடங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

**பிரதான பாடங்கள்** :

(i) சமயம் (ii) சிங்கள மொழியும் இலக்கியமும்/ தமிழ் மொழியும் இலக்கியமும் (iii) ஆங்கில மொழி (iv) கணிதம் (v) வரலாறு (vi) விஞ்ஞானம்

**தொகுதிப் பாடங்கள்**:

(i) முதலாவது பாடத் தொகுதியிலுள்ள பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடம்
(ii) இரண்டாவது பாடத் தொகுதியிலுள்ள பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடம்
(iii) மூன்றாவது பாடத் தொகுதியிலுள்ள பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடம்

3.5 தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்படும் அனைத்துக் கல்வி மற்றும் ஏனைய சான்றிதழ்களதும் செல்லுபடியாகும் திகதி, விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி (2026/05/....) அன்றோ அல்லது அதற்கு முன்னரோ இருத்தல் வேண்டும்.

4.0 **ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான தகைமைகள்:**

பின்வரும் விடயங்கள் குறித்து தங்களது விசேட அவதானத்தைச் செலுத்துவது முக்கியமாகும்.

**கருத்தில் கொள்க** :

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான தகைமைகள் குறித்து மிகவும் தெளிவான புரிதலைப் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஆ) மேலே 3.0 இன் 3.2 மற்றும் 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவை கல்வியியல் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்காக க.பொ.த. (உயர்தரம்) மற்றும் (சாதாரண தரம்) பரீட்சைகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆகக்குறைந்த அடிப்படை கல்வித் தகைமைகளாகும். அதற்கு மேலதிகமாக, ஒவ்வொரு பாடநெறிக்கும் விசேடமாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பாடத் தேர்ச்சிகள் அந்தந்த பாடநெறிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன

(இ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைக்கு அமைவாக, விண்ணப்பதாரர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட Z-புள்ளி ஒழுங்கு வரிசைக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(ஈ) ஏதேனும் ஒரு மாவட்டத்திலிருந்து அல்லது தேசிய அடிப்படையில் அந்தந்த பாடநெறிகளுக்காகச் ஆட்சேர்க்கப்படும் மொத்த எண்ணிக்கையில் உரிய ஒதுக்கீட்டிற்கு உரித்தான எண்ணிக்கையின் இரு மடங்கிற்குச் சமமான விண்ணப்பதாரர்கள், நிகழ்நிலை தரவுத் முறைமையில் உள்ள தகவல்களிலிருந்து கணினி நிகழ்ச்சித்திட்டமொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, சான்றிதழ்கள் மற்றும் தகுதிகளைப் பரிசோதிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அவர்களுள் தகைமை ஒழுங்கு வரிசைக்கு அமைய நிர்ணயிக்கப்பட்ட அளவான விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

(உ) பாடநெறிகளுக்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றுவது கட்டாயமானது என்பதுடன், ஆசிரியர் தொழிலுக்குப் பிரவேசிப்பதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உள ரீதியான இயலுமைகள் இதன்போது பரிசோதிக்கப்படும்.

(ஊ) தொழில்நுட்பவியல் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடத்தப்படும் ஒவ்வொரு பாடநெறிக்கும் ஆட்சேர்ப்பதற்கான பொருந்தக்கூடிய கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய விசேட தகைமைகள் பின்வருமாறு.

**பாடநெறி இலக்கம் 01 - பொறியியல் தொழில்நுட்பம்**

4.1

4.1.1 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் பொறியியல் தொழில் நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வியல் பாடத்துறையில் மூன்றாவது பாடமாக அங்கீகரிக்கப்பட்ட பாடங்களுள் ஒன்றையும் சேர்த்து மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

4.1.2 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் பௌதிக விஞ்ஞான பாடத்துறையின் கீழ் இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய மூன்று (03) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

4.1.3 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் ஏனைய பாடத்துறைகளின் கீழ் இணைந்த கணிதம் அல்லது உயர்கணிதம் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்களுள் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.1.4 3.0 இன் 3.3 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

- தெரிவு செய்வதற்கான முன்னுரிமை ஒழுங்குவரிசை

இந்த பாடநெறிக்காக ஆட்சேர்க்கப்படும் மொத்த எண்ணிக்கையில் 60% சதவீத மானோர் 4.1.1 இன் கீழ் விண்ணப்பித் துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்தும், 30% சதவீதமானோர் 4.1.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களி லிருந்தும், 10% சதவீதமானோர் 4.1.3 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்ப தாரர்களிலிருந்தும் என்ற வகையில் தகைமை ஒழுங்கு வரிசைப்படி தெரிவு செய்யப் படுவார்கள். ஏதேனும் ஒரு பாடத்துறையின் கீழ் போதுமான தகைமையுள்ளவர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில், 4.1.1, 4.1.2, 4.1.3 ஆகிய பாடத்துறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு முறையே முன்னுரிமை கிடைக்கும் வகையில் மீதி வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**பாடநெறி இலக்கம் 02 - உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்**

4.2

4.2.1 2024 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் உயிர்முறை மைகள் தொழில்நுட்பவியல், தொழில்நுட்ப வியலுக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத்துறையில் மூன் றாவது பாடமாக அங்கீகரிக்கப்பட்ட பாடங் களுள் ஒன்றையும் சேர்த்து மூன்று (03) பாடங் களில் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல்.

அல்லது

4.2.2 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் உயிரியல் பாடத்துறையின் கீழ் உயிரியல், பௌதிகவியல் / விவசாய விஞ்ஞானம், இரசாயனவியல் ஆகிய பாடங்களுள் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.2.3 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் ஏனைய பாடத்துறைகளின் கீழ் உயிரியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம், இரசாயனவியல் ஆகிய பாடங்களுள் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

4.2.4 3.0 இன் 3.3 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

- தெரிவு செய்வதற்கான முன்னுரிமை ஒழுங்கு வரிசை

இந்தப் பாடநெறிக்காக ஆட்சேர்க்கப் படும் மொத்த எண்ணிக்கையில் 60% சதவீதமானோர் 4.2.1 இன் கீழ் விண்ணப் பித்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்தும், 30% சதவீதமானோர் 4.2.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களி லிருந்தும், 10% சதவீதமானோர் 4.2.3 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்ப தாரர்களிலிருந்தும் என்ற வகையில் தகைமை ஒழுங்குவரிசைப்படி தெரிவு செய்யப் படுவார்கள். ஏதேனும் ஒரு பாடத்துறையின் கீழ் போதுமான தகைமையுள்ளவர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில், 4.2.1, 4.2.2, 4.2.3 ஆகிய பாடத்துறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு முறையே முன்னுரிமை கிடைக்கும் வகையில் மீதி வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**பாடநெறி இலக்கம் 03 - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்**

4.3

4.3.1 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரு பிரதான பாடமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாடத்துடன் வேறு ஏதேனும் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.3.2 3.0 இன் 3.3 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**கருத்தில் கொள்க:-**

ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரர்கள், அவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தில் பெற்றுள்ள தேர்ச்சி மற்றும் அப் பாடத்திற்குப் பெற்றுள்ள புள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

- தெரிவு செய்வதற்கான முன்னுரிமை ஒழுங்கு வரிசை

(i) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட வி-ண்ணப்பதாரர்களுள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாடத்தில் 'A' சித்தியைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள், அப் பாட-த்திற்குப் பெற்றுள்ள புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

(ii) அதன் பின்னர் மேலும் நிலவும் வெற்றிடங்களு-க்கு, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தில் 'B' சித்தியைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள், அப் பாடத்திற்குப் பெற்றுள்ள புள்ளிகளின் மு-ன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படு-வார்கள்.

(iii) மேலே இலக்கம் (ii) இன் கீழ் தெரிவு செய்த பி-ன்னரும் நிலவும் வெற்றிடங்களுக்கு, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தகவல் மற்றும் தொட-ர்பாடல் தொழில்நுட்ப பாடத்தில் 'C' சித்தியை-ப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள், அப் பாட-த்திற்குப் பெற்றுள்ள புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

## 5.0 பயிலுனர்களைத் தெரிவு செய்வதற்கான நடைமுறை

### 5.1 தெரிவு செய்வதற்கான அடிப்படை

5.1.1 2024 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்காக, 2029 ஆம் ஆண்டில் ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதால் பாடசாலை முறைமையில் ஏற்படும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை, தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் பாடங்களின் பன்முகத்தன்மையை ஏற்படுத்த வேண்டிய அவசியம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு பாட ரீதியாக ஆசிரியர் தேவை கணக்கிடப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கை, 2026 ஆம் ஆண்டில் ஆசிரியப் பயிலுநர்களுக்காகக் கல்வியியல் கல்லூரியினுள் ஒரே நேரத்தில் வழங்கக்கூடிய வசதிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு, ஆட்சேர்க்கப்படும் ஆசிரியப் பயிலுநர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது

5.1.1.1 ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் பிரதான காரணி, ஒவ்வொரு பாடநெறிக்காகவும் கல்வியியல் கல் லூரியினுள் வசதிகளை வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையாகும்.

5.1.1.2 அதற்கமைய, 2024 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்) பெறுபேறுகளின் அடிப்படையில் 2026 ஆம் ஆண்டுக்கான ஆட்சேர்ப்பு பின்வருமாறு இடம்பெறும்.

(i) ஆட்சேர்க்கப்படவுள்ள மொத்த வெற்றிடங்களில் 50% மாவட்ட அடிப்படையிலும், மீதி 50% தேசிய அடிப்படையிலும் ஆட் சேர்க்கப்படும். தேசிய மற்றும் மாவட்ட அடிப்படைகளுக்காக வெற்றிடங்களை ஒதுக்கும்போது தேசிய அடிப்படைக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப் பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் ஒரு பாடநெறிக்கு உரிய மாவட்டங் களிலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப் படும் என அறிவிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை, மாவட்ட அடிப்படை யில் விண்ணப்பதாரர்கள் பெற் றுள்ள Z-புள்ளி வரிசையுடன் வர்த்தமானியில் குறிப்பிடப் பட்டுள்ள ஏனைய தகைமை களையும் முறையாக இணைத்து, 4.0 இன் ‘கருத்தில் கொள்க’ எனும் பந்தியில் மற்றும் அந்தந்த பாடநெறிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை களுக்கு அமைய ஆட்சேர்க்கப் படுவார்கள்.

(iii) மாவட்ட அடிப்படையிலான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதன் பின்னர், தேசிய மட்டத்திலான வெற்றிடங்களுக்கான தெரிவு இடம் பெறும். அதன்போது மீதி யுள்ள விண்ணப்பதாரர்களுள் நாட ளாவிய ரீதியில் அதிகூடிய

Z-புள்ளி வரிசையுடன் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளையும் முறையாக இணைத்து, 4.0 இன் 'கருத்தில் கொள்க' எனும் பந்தியில் மற்றும் உரிய பாடநெறியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு அமைய ஆட்சேர்க்கப் படுவார்கள்.

(iv) வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதன் பின்னர் மாவட்ட அடிப்படையில் வெற்றிடமொன்று ஏற்படுமாயின், தேசிய அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுள் அந்த மாவட்டத்தின் தகைமை வரிசை மற்றும் விருப்புரிமைக்கு அமைய மாவட்ட வெற்றிடம் நிரப்பப்படும். அதன் போது தேசிய மட்டத்தில் வெற்றிடமொன்று ஏற்படுமாயின், அந்த வெற்றிடம் தேசிய மட்டத்தில் நிரப்பப்படும்.

5.1.2 குறித்த மாவட்டத்தின் அல்லது தேசிய அடிப்படையில் ஒரே Z-புள்ளிகளைப் பெற்றுள்ள பல மாணவர்களுள் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் போது, முதன்முறையாகத் தோற்றிய க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் 3.0 இன் 3.5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு (06) கட்டாயப் (பிரதான) பாடங்களில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் கருத்திற்கொள்ளப்படும்.

அதற்கமைய, க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைப் பெறுபேறுகளில் ஒரு சிறப்புச் சித்திக்கு 4 புள்ளிகளும், ஒரு அதி திறமைச் சித்திக்கு 3 புள்ளிகளும், ஒரு திறமைச் சித்திக்கு 2 புள்ளிகளும், ஒரு சாதாரண சித்திக்கு 1 புள்ளியும் என்ற அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு, அந்த மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு இடம்பெறும்.

5.1.3 மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யும் போது, ஏதேனும் ஒரு பாடநெறிக்காக ஒரு மாவட்டத்தின் கீழ் உள்ள முழுமையான தரவுத் தொகுதியிலும் தகைமைகளைப் பூர்த்தி செய்த போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில், அந்த மாவட்டம் அமையப்பெற்றுள்ள மாகாணத்தின் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களின் உரிய திறமை வரிசையும், அதுவும் போதுமானதாக இல்லையெனில் முழு நாடளாவிய ரீதியிலான திறமை வரிசையும் கருத்திற்கொள்ளப்பட்டு அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

5.2 நிரந்தர வதிவிடத்தைத் தீர்மானித்தல் :

5.2.1 விண்ணப்பதாரர்களின் நிரந்தர வதிவிட மாவட்டம்/மாகாணம் பின்வரும் நடைமுறைக்கு அமைய தீர்மானிக்கப்படும்.

5.2.1.1 மாவட்ட அடிப்படையில் ஆட்சேர்க்கும் போது, விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டமானது அவர் முதன்முறையாக க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் அதற்கு முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் அவர் நிரந்தரமாக வசித்த மாவட்டமாகும்.

5.2.1.2 இதன்போது விண்ணப்பதாரர் முதன் முறையாக அல்லது அதற்குப் பின்னரான ஒரு தடவையில் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அமைந்துள்ள, விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிடத்திற்கு வெளியே அமைந்துள்ள மாவட்டம்/ தனிப்பட்ட வசதி கருதி குறித்த காலப்பகுதிக்குள் தற்காலிகமாக வசித்த மாவட்டம்/ தற்போது வதிவிடம் வேறொரு மாவட்டத்திற்கு மாற்றப்பட்டிருப்பின் அந்த மாவட்டம் விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டமாகக் கருதப்படமாட்டாது என்பது வலியுறுத்தப்படுகிறது.

5.2.1.3 மாகாணத் திறமை கருத்திற்கொள்ளப்படும் போது, விண்ணப்பதாரர் முதன்முறையாக க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் அதற்கு முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் அவர் நிரந்தரமாக வசித்த மாகாணம் விண்ணப்பிக்கும் மாகாணமாகக் கருதப்படும்

5.2.1.4 தேசிய அடிப்படையில்/ அகில இலங்கை ரீதியான திறமை வரிசையைக் கருத்திற்கொள்ளும் போது நிரந்தர வதிவிடம் கருத்திற் கொள்ளப் படமாட்டாது.

5.2.2 ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனது நிரந்தர வதிவிடத்தைப் பின்வரும் நடைமுறைக்கு உட்பட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

கருத்தில் கொள்க :-

- தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன், நேர்முகப் பரீட்சையின் போது வாக்காளர் இடாப்புத் தரவுகள் நிகழ்நிலை

மூலமாக சரிபார்க்கப்படவுள்ளதால், விண்ணப்பிக்கும் போது விண்ணப்ப தாரர்கள் அது தொடர்பான எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. எனினும், நேர்முகப் பரீட்சையின் போது பின்வருமாறு உரிய உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

I. ஆட்சேர்ப்பதற்கான அடிப்படைக்கு அமைவாக, விண்ணப்பதாரர்கள் தமது நிரந்தர வதிவிடத்தை வாக்காளர் இடாப்பி தரவுகள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்

II. விண்ணப்பதாரரின் வயது பூர்த்தி யடையாத காரணத்தினால் வாக்காளர் இடாப்பி பதிவு செய்ய முடியாமல் போன உரிய ஆண்டுகளுக்காக, பெற்றோரின் பெயர்கள் உள்ளடங்கிய வாக்காளர் இடாப்புத் தரவுகள் மூலம் நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

III. ஏதேனும் ஒரு காரணத்தினால் பெற்றோர் தவிர்ந்த வேறு ஒரு பாதுகாவலரின் கீழ் குறித்த காலப்பகுதியில் நிரந்தரமாக வசித்த விண்ணப்பதாரர்கள், அந்தப் பாதுகாவலர் உரிமையை அக்குறித்த காலப்பகுதியுடன் கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் வதிவிட மற்றும் நற்சான்றிதழின் (DS – 04) 'ஏனைய விடயங்கள்' எனும் நிரலின் கீழ் குறிப்பிட்டு, நேர்முகப் பரீட்சையின் போது உறுதிப்படுத்த வேண்டும். இதன்போது விண்ணப்பதாரருக்கு வாக்குரிமை இல்லாத ஆண்டுகளுக்காகப் பாதுகாவலரின் வாக்காளர் இடாப்பின் தரவுகள் மூலம் வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

IV. யாதேனும் ஒரு காரணத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட மூன்று (03) ஆண்டுகளுக்கோ அல்லது அவற்றுள் சில ஆண்டுகளுக்கோ வாக்காளர் பதிவு மேற்கொள்ளப் படாததன் காரணமாக வாக்காளர் இடாப்பின் தரவுகள் மூலம் வதிவிடத்தை உறுதிப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில், வாக்காளர் பதிவை மேற்கொள்ள முடியாமைக்கான ஏற்றுக் கொள்ளத்தக்க காரணங்களை கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் வதிவிட மற்றும் நற்சான்றிதழின் (DS-04) 'ஏனைய விடயங்கள்' என்பதன் கீழ், அக்குறித்த காலப்பகுதியில் நிரந்தரமாக வசித்த பிரதேச கிராம உத்தியோகத்தரின் கையொப் பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும்.

V. வாக்காளர் பதிவு மேற்கொள்ளப் படாததன் காரணமாக ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்களுக்கு மாத்திரம் வாக்காளர் இடாப்பில் தரவுகள் காணப்படும் சந்தர்ப்பங்களில், மீதிக் காலப்பகுதிக்காக ஏற்றுக் கொள்ளத்தக்க ஏனைய ஆவணங்கள் மூலம் வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும். (உதாரணம்:- கிராம உத்தியோகத்தர் சான்றிதழ், ஆட்பதிவுத் திணைக்களத்தின் அடையாள அட்டையிலுள்ள முகவரி).

VI. யாதேனும் ஒரு வகையில் மூன்று (03) ஆண்டுகளுக்கும் அல்லாமல் ஒரு வருடத்திற்கு மாத்திரம் விண்ணப்பதாரர் பதிவு செய்யப்பட்டிருப்பின், மீதி ஆண்டுகளுக்காகப் பெற்றோர்/ பாதுகாவலரின் வாக்குப்பதிவு எந்த மாவட்டத்தில் காணப்பட்ட போதிலும், விண்ணப்பதாரரின் வாக்குப்பதிவிற்கே முன்னுரிமை அளிக்கப்படும்.

## 6.0 தெரிவு செய்தல் தொடர்பான ஏனைய விடயங்கள்

6.1. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், உரிய பாடநெறிகளுக்கான தகைமையை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றுகள் மற்றும் சான்றிதழ்களின் மூல பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். குறித்த தினத்தில் எவ்வித அறிவித்தலுமின்றி நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்காத அந்தந்த மாவட்ட விண்ணப்பதாரர்களுக்குப் பதிலாக, அந்தந்த மாவட்டத்திலிருந்து தகைமை வரிசைப்படி ஏனைய விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவதுடன், சமூகமளிக்காத விண்ணப்பதாரர்கள் குறித்து மீண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது

6.2 அனைத்துச் சான்றிதழ்களினதும் மூல பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் கட்டாயமாகும் என்பதுடன், அன்றைய தினம் மூல பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறும்

விண்ணப்பதாரர்கள் தெரிவு நடவடிக்கைகளின் போது கருத்திற்கொள்ளப்படமாட்டார்கள்

6.3 பாடநெறியின் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைவதற்கும் அதேபோன்று ஆசிரியர் தொழிலுக்குப் பிரவேசிப்பதற்கும் விண்ணப்பதாரர்களிடம் இருக்க வேண்டிய உடல் மற்றும் உளத் தகைமை, கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நியதிகளுக்கமைய முதலாவது நேர்முகப் பரீட்சையின் போது உரிய நேர்முகப் பரீட்சை சபையினால் பரிசோதிக்கப்படும். இதன்போது பாடநெறியைக் கற்பதற்கும் ஆசிரியர் தொழிலுக்குப் பிரவேசிப்பதற்கும் விண்ணப்பதாரரிடம் உள்ள உடல், உளத் தகைமை போதுமானதா என்பது குறித்த தமது பரிந்துரையை அவர்கள் முன்வைப்பார்கள்.

6.4 மேலே 6.3 ஆம் பந்தியின் பிரகாரம் தகைமை கொண்டுள்ள மற்றும் ஆட்சேர்ப்பதற்கான நியதிகளின் கீழ் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணபதாரர்களுக்கு அது குறித்து அறிவிக்கப்படும். அந்த விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர், விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் உண்மைத்தன்மை மீண்டும் ஒருமுறை சரிபார்க்கப்படும். அதற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே உரிய தொழில்நுட்பவியல் தேசிய கல்வியியல் கல்லூரியின் குறித்த பாடநெறிக்காகப் பதிவு செய்யப்படுவார்கள். தொழில்நுட்பவியலுக்கான தேசிய கல்வியியல் கல்லூரியில் பதிவு செய்யப்பட வேண்டிய திகதியிலிருந்து பத்து (10) அலுவலக நாட்களுக்குள் பதிவு செய்யத் தவறினால் அவருக்குரிய அனுமதி வாய்ப்பு இரத்தாகும். அதற்கமைய ஏற்படும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பிற்குரிய அடிப்படையின் கீழ், குறித்த தரவுத் தொகுதியில் உள்ள விண்ணப்பதாரர்கள் உரிய திறமை வரிசைப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவார்கள்.

6.4.1 எனவே, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பதிவு செய்யத் தவறும் விண்ணப்பதாரர்களினால் பின்னர் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

6.4.1.1 மேலே இலக்கம் 6.3 அல்லது 6.4 இன் கீழ் நேர்முகப் பரீட்சையின் போது பரிந்துரைகளை வழங்க முடியாத அளவிலான ஏதேனும் விசேட சிக்கல் நிலைமைகள் அவதானிக்கப்பட்டால் மாத்திரம், அவை கல்வி அமைச்சின் விசேட குழுவொன்றிற்கு அனுப்பி வைக்கப்படும். அந்த அறிக்கை கல்வியியல் கல்லூரிச் சபைக்கும்/ கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கும் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் பின்னர் எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படும்

6.5. முதலாவது மற்றும் இரண்டாவது நேர்முகப் பரீட்சைகளில் தோற்றியதன் பின்னர் கல்வியியல் கல்லூரிகளில் பதிவு செய்யத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், கல்லூரிக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் தமது சுகாதார நிலையை உறுதிப்படுத்தும் மருத்துவப் பரிசோதனைக்குத் தோற்றுதல் வேண்டும்.

6.6. எந்தவொரு விண்ணப்பதாரரும் தமது தகைமைகளுக்கேற்ப ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். எனினும், திறமை வரிசைப்படி தகைமை பெறும் பாடநெறிகளுக்கு மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்பதுடன், ஒன்றுக்கும் மேற்பட்ட பாடநெறிகளுக்குத் தெரிவாகத் தகைமை பெற்றுள்ள சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரரின் பாடநெறி விருப்புரிமை வரிசைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு ஒரு பாடநெறிக்காக மாத்திரம் தெரிவு செய்யப்படுவார்.

6.7 தொழில்நுட்பவியலுக்கான தேசிய கல்வியியல் கல்லூரியின் ஏதேனும் ஒரு பாடநெறிக்காகப் பதிவு செய்ததன் பின்னர், யாதேனும் ஒரு வகையில் மற்றுமொரு தேசிய கல்வியியல் கல்லூரிப் பாடநெறிக்காகப் பிற்காலத்தில் தெரிவு செய்யப்பட்டால், அதற்கு எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது

6.8 போதுமான ஆசிரியர் தேவை நிலவாத பாடநெறிகளை இரத்துச் செய்தல், ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஆசிரியப் பயிலுநர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் மற்றும் ஒவ்வொரு பாடநெறிகளையும் நிறுவனங்களுக்குள் நிலைப்படுத்துதல் தொடர்பான இறுதித் தீர்மானம் கல்வியியல் கல்லூரிச் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

7.0 பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது அனுமதி பெறுவதற்குத் தகுதியற்றவர்கள்

7.1 ஏற்கனவே அரசாங்க அல்லது அரசாங்க நிதியுதவி பெறும் உதவி பெறும் பாடசாலைகளில் அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பிரிவேனாக்களில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட

ஏனைய நிறுவனங்களில் ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளவர்கள்

7.2. அரசாங்கப் பாடசாலையொன்றில் ஆசிரியர் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள்,

7.3. தற்போதளவில் தேசிய கல்வியியல் கல்லூரியொன்றில் பாடநெறியொன்றைக் கற்றுக்கொண்டிருப்பவர்கள் அல்லது கற்றுக்கொண்டிருக்கும் போது விலகியவர்கள் அல்லது கற்று முடித்தவர்கள்,

7.4. அரசாங்கப் பல்கலைக்கழகமொன்றில் / அரசாங்கப் பல்கலைக்கழக நிறுவனமொன்றில் க.பொ.த. (உயர்தரம்) தகைமைகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும் பட்டப் பாடநெறி ஒன்றைக் கற்பதற்காக 'அரசாங்க இலவசக் கல்விச் சலுகையின்' கீழ் உள்வாரி மாணவராகப் பதிவு செய்துள்ளவர்கள் / கற்றுக்கொண்டிருப்பவர்கள் / பட்டப் பாடநெறியை கற்று முடித்தவர்கள்

கருத்தில் கொள்க :-

பல்கலைக்கழக முதற்பட்டப் பாடநெறியைக் கற்பதற்காகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிகழ்நிலை முறைமையூடாகப் பதிவு செய்திருப்பதும் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியற்றவராகக் கருதப்பட ஏதுவாகும்.

7.5 ஒழுக்காற்று காரணங்களுக்காக அல்லது ஏனைய காரணங்களுக்காகத் தேசிய கல்வியியற் கல்லூரியொன்றிலிருந்து மாணவர் அந்தஸ்து இரத்துச் செய்யப்பட்டவர்கள்

7.6 திருமணம் பதிவு செய்யப்பட்ட அல்லது விவாகரத்து பெற்ற விண்ணப்பதாரர்கள்.

8.0 **பாடநெறிக்கான நிபந்தனைகள்:**

8.1 பாடநெறிக் காலம் நான்கு ஆண்டுகளாகும். இது தேசிய கல்வியியற் கல்லூரியில் மூன்று ஆண்டுகால வதிவிட நிறுவனம் சார்ந்த பயிற்சியையும், பாடசாலை மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் சார்ந்த 12 மாத கால பயிலுனர் பயிற்சியையும் உள்ளடக்கியதாகும். மூன்றாம் ஆண்டு இறுதியில் நடத்தப்படும் இறுதி வெளிவாரிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, ஆசிரியப் பயிலுநரின் வருகை 90% க்கும் குறையாமல் இருத்தல் கட்டாயமாகும்

8.2 ஒவ்வொரு ஆசிரியப் பயிலுநரும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் நடத்தப்படும் உள்வாரித் தொடர் மதிப்பீடுகள், உள்வாரிப் பரீட்சைகள் மற்றும் இறுதி வெளிவாரிப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

8.3 ஆசிரியப் பயிலுநர் ஒருவர் தங்கியிருந்து கல்வி கற்கும் மூன்று ஆண்டுகளில், ஒரு ஆண்டின் பத்து (10) மாதங்களுக்கு, ஒரு மாதத்திற்கு ரூ. 10,500/- பெறுமதியான உணவு மற்றும் வதிவிட வசதிகள் வழங்கப்படும். பயிலுனர் பயிற்சி ஆண்டின் பத்து (10) மாதங்களுக்கு, ஒரு மாதத்திற்கு ரூ. 10,500/- வீதம் கொடுப்பனவு வழங்கப்படும். தனிப்பட்ட தேவைகளுடன் தொடர்புடைய ஏனைய செலவுகளை ஆசிரியப் பயிலுநரே பொறுப்பேற்க வேண்டும்.

8.4 தேசிய கல்வியியற் கல்லூரியொன்றில் பதிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், பாடநெறிக்காகச் செலவிடப்படும் தொகை மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக கல்வி அமைச்சின் செயலாளருடன் பதினைந்து இலட்சம் ரூபா (1,500,000.00) பிணைமுறி மற்றும் ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட வேண்டும். விண்ணப்பதாரர் தொழில்நுட்பவியல் தேசிய கல்வியியல் கல்லூரியில் பதிவு செய்த திகதியிலிருந்து அறுபது (60) நாட்காட்டி நாட்களுக்குள் பாடநெறியிலிருந்து விலகுவாராயின், அவர் சார்பாக மேற்கொள்ளப்பட்ட செலவை அரசாங்கத்திற்கு மீளச் செலுத்திவிட்டு விலக முடியும். விண்ணப்பதாரர்கள் கல்லூரியில் பதிவு செய்த திகதியிலிருந்து அறுபது (60) நாட்களுக்குப் பின்னர் விலகும் போது, இந்தப் பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்தின் முழுத் தொகையையும் (ரூ. 1,500,000.00) அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். மேலும், யாதேனும் ஒரு விண்ணப்பதாரர் எவ்வித முறையான அறிவித்தலுமின்றி ஒரு மாதத்திற்குக் குறையாத காலம் பாடநெறியின் கல்வி நடவடிக்கைகளில் கலந்துகொள்ளத் தவறினால், அவர் பாடநெறியிலிருந்து விலகியவராகக் கருதப்பட்டு, பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழுத் தொகையான ரூ. 1,500,000.00 அரசாங்கத்தினால் அறவிடப்பட்டதன் பின்னர் பாடநெறியிலிருந்து நீக்கப்படுவார்.

பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின்னர் அரசாங்கப் பாடசாலையொன்றுக்கு வழங்கப்படும் ஆசிரியர் நியமனத்தை ஏற்க மறுத்தால், பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழுத் தொகையையும் (ரூ. 1,500,000.00) அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். மேலும், பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து அரசாங்கப் பாடசாலை நியமனத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், ஐந்து (05) ஆண்டுகள் அரசாங்கச் சேவையில் ஈடுபடாத ஒருவர், ஐந்து ஆண்டுகளில் மீதமாக

உள்ள சேவைக்காலத்திற்கு (மாத அடிப்படையில் கணக்கிடப்பட்டு) உரிய தொகையை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும்.

அத் தொகை: ரூ 1,500,000 x பூர்த்தி செய்ய மீதமாக உள்ள மாதங்களின் எண்ணிக்கை / 60 மாதங்கள்

எனக் கணிப்பிடப்படும்.

8.4.1 விசேட மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் பாடநெறிக் காலப்பகுதியில் குறித்த பாடநெறியிலிருந்து விலகுவாராயின், பின்வரும் ஆவணங்கள் மூலம் நோயின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும்.

- நோய் நிலைமைக்காகப் பெற்றுக்கொண்ட சிகிச்சைகளுடன் தொடர்புடைய ஏற்றுக்கொள்ளத்தக்க மருத்துவ அறிக்கைகள்
- கற்றல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குப் போதுமான சுகாதார நிலைமை இல்லையென அரசாங்க வைத்திய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்

குறித்த ஆவணங்களைக் கருத்திற்கொண்டு, கல்வியியல் கல்லூரியின் முகாமைத்துவக் குழுவினால் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதன் பின்னர், கல்வி அமைச்சின் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றின் மற்றும் சுகாதார அமைச்சினால் பரிந்துரைக்கப்படும் அரசாங்க வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவரின் அல்லது வைத்தியச் சபையின் பரிந்துரைகளைப் பெற்று, அதற்காக கல்வியியல் கல்லூரிகள் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அறவீடுகள் ஏதுமின்றி பாடநெறியிலிருந்து விலகுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

8.4.2 சட்டப்பூர்வமாகப் பாடநெறியிலிருந்து விலகினாலன்றி, பாடநெறிக் காலப்பகுதியிலோ அல்லது நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் வரையிலான காலப்பகுதியிலோ வெளிநாடு செல்வதற்கு எந்தவொரு ஆசிரியப் பயிலுநருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

8.5 பாடநெறிக் காலப்பகுதியில் ஒழுக்காற்று காரணங்களுக்காக அல்லது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளின் போது போலித் தகவல்களைச் சமர்ப்பித்தமைக்காக அல்லது 7.0 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பிப்பதற்கு அல்லது அனுமதி பெற்றுக் கொள்வதற்கு தகுதியற்றவர்கள் எனும் பந்திக்கு அமைவாக உண்மையான தகவல்களை மறைத்தமைக்காகப் பாடநெறியிலிருந்து நீக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில், ஒப்பந்தம் மற்றும் பிணைமுறையின் முழுத் தொகையையும் (ரூ. 1,500,000.00) அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8.6 பாடநெறி நடைபெறும் காலப்பகுதியில் ஆசிரியப் பயிலுநர் ஒருவருக்கு 7.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான பாடநெறியொன்றைக் கற்பதற்கு எவ்விதத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு பாடநெறி யொன்றில் ஈடுபடுவது உறுதிப்படுத்தப்பட்டால், ஆசிரியப் பயிலுநர் கையொப்பமிட்ட பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்தின் முழுப் பெறுமதியையும் (ரூ. 1,500,000.00) அறவிட்டுப் பாடநெறியிலிருந்து நீக்கப்படுவார்.

8.7 வர்த்தமானி அறிவித்தலின் 7.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வேறு ஏதேனும் அரசாங்க உயர்கல்வி நிறுவனமொன்றில் தொழிற் பயிற்சி பாடநெறி / டிப்ளோமா அல்லது உயர் டிப்ளோமா பாடநெறியொன்றுக்காகப் பதிவு செய்துள்ள/ கற்றுக்கொண்டிருக்கின்ற விண்ணப்பதாரர்கள், கல்வியியற் கல்லூரிப் பிரவேசத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டால், அதற்காகப் பதிவு செய்யும் தினத்தில் குறித்த நிறுவனத்தில் தாம் பதிவு செய்துள்ள / கற்றுக்கொண்டிருக்கின்ற பாடநெறியிலிருந்து முறையாக விலகியுள்ளதை உறுதிப்படுத்தும் ஆவணங்களைக் கல்வியியல் கல்லூரியிடம் ஒப்படைப்பது கட்டாயமாகும். இதனைச் செய்யத் தவறும் விண்ணப்பதாரர்கள் கல்வியியல் கல்லூரிக்குள் பதிவு செய்யப்படமாட்டார்கள்.

8.8 பாடநெறிக் காலப்பகுதியில் ஆசிரியப் பயிலுநர் திருமணத்தைப் பதிவு செய்தால் அல்லது விண்ணப்பிக்கும் போது / கல்வியியல் கல்லூரிப் பதிவிற்கு முன்னர் திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளமை / விவாகரத்து பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டால் மாணவர் அந்தஸ்து ரத்துச் செய்யப்படும். திருமணம் செய்துள்ளமை கண்டறியப்பட்ட பின்னர், பல்வேறு காரணங் களைக் கூறி பாடநெறிக் காலப்பகுதியில் விவாகரத்து பெறுபவர்களுக்கு மீண்டும் மாணவர் அந்தஸ்து வழங்கப்படமாட்டாது.

8.9 பாடநெறிக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் நடத்தை, வரவு, ஆர்வம் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் (இணைப் பாடவிதான செயற்பாடுகள் உட்பட) முன்னேற்றத்தைக் காட்டாத ஆசிரியப் பயிலுநர் ஒருவர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார். அத்துடன், நிறுவன ரீதியான பயிற்சியின் முதலாம்

ஆண்டில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டில் திருப்தி கரமான மட்டத்தை எட்டத் தவறினால் பாட நெறியிலிருந்து நீக்கப்படுவார். இது தொடர்பான கல்வியியற் கல்லூரிகள் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

8.10 பாடநெறிக் காலப்பகுதியில் ஆசிரியப் பயிலுநரின் உடல் மற்றும் உளத் தகைமை தொடர்பாக பீடாதிபதியிடமிருந்து அல்லது பயிலுனர் பயிற்சிக் காலப்பகுதியில் அதிபரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைப்பின், அவர் மீண்டும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார். அதன் அறிக்கை கல்வியியற் கல்லூரிகள் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு இறுதித் தீர்மானம் வழங்கப்படும்.

8.11 பாடநெறிக் காலப்பகுதியில், கல்வியியற் கல்லூரியின் ஒழுக்காற்று விதிகளுக்கு முரணான ஏதேனும் செயல்களில் ஈடுபட்டமை உறுதிப் படுத்தப்பட்டால், அது தொடர்பாகக் கல்வியியற் கல்லூரியின் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரை களுக்கமைய ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் வகுப்புத் தடை விதித்தல் / பாடநெறிக் காலத்தை நீடித்தல் / பாடநெறியிலிருந்து நீக்குதல் / ஏனைய பொருத்த மான தண்டனைகளுக்கு உட்படுத்தும் அதிகாரம் கல்வியியற் கல்லூரிகள் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உள்ளது.

8.12 பாடநெறியைக் கற்றுக்கொண்டிருக்கும் காலப் பகுதியில், உரிய ஆசிரியப் பயிலுநர்களுக்கு வாரநாட்களிலோ அல்லது வார இறுதி நாட் களிலோ வேறு எந்தவொரு பாடநெறியையும் கற்பதற்கு எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

8.13 கல்விமானி பட்டதாரி ஆசிரியர்கள் தமது சேவை யின் முதல் ஐந்து ஆண்டுகளுக்குள், யாதேனும் ஒரு காரணத்திற்காகச் சேவையிலிருந்து விலகு வார்களாயின் அல்லது சேவையிலிருந்து விலகி வெளிநாடு செல்வார்களாயின், உரிய பிணை முறி மற்றும் ஒப்பந்தத்தின் பிரகாரம் முழுப் பெறுமதியிலிருந்து (ரூ. 1,500,000.00) எஞ்சியுள்ள காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய தொகையை (மாத அடிப்படையில் கணக்கிடப்பட்டு) அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். அத்தொகை பின்வருமாறு கணக்கிடப்படு,

$$\frac{\text{ரூ } 1,500,000}{60 \text{ மாதங்கள்}} \times \text{பூர்த்தி செய்ய எஞ்சியுள்ள மாதங்களின் எண்ணிக்கை.}$$

**கருத்தில் கொள்க :**

- முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் பந்தி 8.13 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேவையிலிருந்து விலகினால், மீண்டும் ஒரு தேசிய கல்வியியல் கல்லூரி கல்வியியற் பட்டதாரியாக ஆசிரியர் தொழிலில் இணைவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

- அரசாங்கப் பாடசாலையொன்றில் முதல் நியமனத் திகதியிலிருந்து ஐந்து (05) ஆண்டு காலச் முனைப்புடன் கூடிய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாத பட்சத்தில், அந்தத் தேசிய கல்வியியற் கல்லூரி கல்விமானி பட்டதாரி ஆசிரியர் உரிய விரிவான பட்டச் சான்றிதழுக்கு விண்ணப்பிப் பதற்குத் தகுதியற்றவராவார்.

- ஆசிரியர் சேவையின் முதல் ஐந்து ஆண்டு களைப் பூர்த்தி செய்யாத, தகுதிகாண் காலத்திற்கு உட்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரி கல்விமானி பட்டதாரி ஆசிரியர்கள், கல்விச் செயலாளரின் 24/2017 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின பிரகாரமும் வர்த்தமானி அறிவித்தல், ஒப்பந்தம், பிணை முறி, தாபன விதிக் கோவையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் குறித்த காலப்பகுதியில் நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்கு அமைவாகவும் கல்வி நடவடிக் கைகளுக்காக மாத்திரம் சம்பளமற்ற விடு முறையில் வெளிநாடு செல்ல முடியும்.

- ஆசிரியர் சேவையின் முதல் ஐந்து ஆண்டு களைப் பூர்த்தி செய்யாத, ஆனால் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரி கல்விமானி பட்டதாரி ஆசிரியர்கள், கல்விச் செயலாளரின் 24/2017 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தி பிரகாரமும் வர்த்தமானி அறிவித்தல், ஒப்பந்தம், பிணைமுறி, தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16 ஆம் பிரிவு மற்றும் குறித்த காலப்பகுதியில் நடைமுறையிலுள்ள சட்டவிதிகளுக்கு அமை வாகவும் கல்வி அல்லது தொழில் வாய்ப்பு நடவடிக்கைகளுக்காகச் சம்பளமற்ற விடு முறையில் வெளிநாடு செல்ல முடியும்.

8.14 பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் ஆசிரியப் பயிலுநர்களுக்குக் கல்வி மாணி பட்டம் வழங்கப்படும். பாடநெறி சார்ந்த வேலைகள் மற்றும் ஆளுமை விருத்தி (கட்டாயமாகப் பங்கேற்க வேண்டிய இணைப் பாடவிதான செயல்பாடுகள் உட்பட) பாட நெறிக் காலப்பகுதியில் தொடர்ச்சியாக மதிப் பிடப்படும் என்பதுடன், இந்த மதிப்பீடுகள்

பட்டத்தை வழங்குவதற்காக மேற்கொள்ளப் படும் இறுதி மதிப்பீட்டின் ஒரு பகுதியாக அமையும்.

8.15 கல்விமானி பட்டத்தைப் பெற்றுக்கொண்ட ஆசிரியப் பயிலுநர்களுக்கு அரசாங்கப் பாடசாலை களில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும். அவர்கள் மாவட்ட / மாகாண/ தேசிய அடிப் படையில் ஆட்சேர்க்கப்பட்ட போதிலும், இட மாற்றம் வழங்கும் போது அந்தந்த மாவட்டங் களில் அல்லது மாகாணங்களில் வெற்றிடங்கள் இல்லையெனில், நாட்டின் எப்பாகத்திலும் பணி யாற்றுவதற்கு அவர்கள் உடன்படுதல் வேண்டும். இடமாற்றம் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு, கல்வியியற் கல்லூரிகள் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

8.15.1 பாடநெறிகளுக்கான தெரிவு நேர்முகப் பரீட்சை களுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள், மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு உடன்படுவ தாயின் மாத்திரமே அந்த நேர்முகப் பரீட்சை களுக்குத் தோற்ற வேண்டும்.

8.15.2 மேலுள்ள நிபந்தனைகளின் கீழ் பாடநெறியைக் பயிலும் விண்ணப்பதாரர்கள், தாம் பயிலும் பாடநெறிக்குரிய பாடத்தைக் கற்பிப்பதில் கட்டாயமாக ஈடுபடுதல் வேண்டும். மேலும், கல்விமானி பட்டத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர், மாவட்ட / மாகாண / தேசிய அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும் விண்ணப்ப தாரர்கள், தமது முதல் நியமனத்தைப் பெறும் - அதாவது தமது நிரந்தர வதிவிட மாவட்டத்திலோ / நிரந்தர வதிவிட மாகாணத் திலோ அல்லது தேசிய அடிப்படையில் பெயரிடப்படும் மாவட்டத்திலோ அல்லது முதல் நியமனம் வழங்கப்படும் வேறு ஏதேனும் மாவட்டத்திலோ / மாகாணத்திலோ - முதல் நியமனத் திகதியிலிருந்து ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் சேவை செய்வதைக் கட்டாய சேவை நிபந்தனையாகக் கருதி, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருடன் பிணைமுறி மற்றும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

8.16 ஆட்சேர்ப்பு நடைமுறையைச் செயற்படுத்தும் போது, அது தொடர்பாக உரிய அதிகாரி களுக்கு ஆசிரியப் பயிலுநரினால் அல்லது அவருடன் தொடர்புடைய வேறு ஏதேனும் தரப்பினரினால் மேற்கொள்ளப்படும் முறை யற்ற அழுத்தங்கள், அவரைச் ஆட்சேர்ப்ப தற்கு தகுதியற்ற ஒரு காரணியாகக் கருதப் படும்

8.17 விண்ணப்பதாரர்களினால் விண்ணப்பிக்கப் படும் பாடநெறிகளுடன் தொடர்புடைய அனைத்துக் கல்வி மற்றும் ஏனைய தகைமை களும் விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ (2026/05/22) அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8.18 கல்வியியற் கல்லூரியின் ஏதேனும் ஒரு பாடநெறிக்குரிய மொழியில், குறித்த மாவட்டத்திலிருந்து ஆட்சேர்க்கப்பட வேண்டிய எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு மாவட்ட/ மாகாண/ தேசிய திறமை வரிசைப்படி தகுதியுள்ளவர்கள் போதாதிருப்பின், அந்தச் சம்பந்தப்பட்ட கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய பாடநெறிகளுள் கல்வித் முறை மையில் அதிக ஆசிரியர் தேவையுள்ள பாட நெறிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் வகையில், அந்தந்தப் பாடநெறிகளின் கீழ் தேசிய அடிப்படையில் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து மீதியாக உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

8.19 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படத் தகுதியுள்ள விண்ணப்ப தாரர்களின்பெயர்ப்பட்டியல்கல்விஅமைச்சின் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படும். இது தொடர்பாக அவதானத்துடன் இருப்பது விண்ணப்பதாரர்களின் பொறுப்பாகும். இந்த நேர்முகப் பரீட்சையில் பங்கேற்பது என்பது சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான ஒரு உரிமையாகாது என்பதையும் விண்ணப்ப தாரர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

9.0 விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் :

- வர்த்தமானி அறிவித்தலின் 12.0 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஒவ்வொரு பாட நெறிக்கும் ஆட்சேர்க்கப்படு எண்ணிக்கை குறித்து மிகவும் தெளிவான புரிதலைப் பெற்று அதற்கேற்ப விண்ணப்பித்தல் வேண்டும்

9.1 மிகவும் முக்கியமானது:

9.1.1 அனைத்து விண்ணப்பதாரர்களும் நிகழ்நிலை முறைமையின் (Online System) ஊடாக மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும்

**கருத்தில் கொள்க** : விண்ணப்பங்களைப்பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டிய அவசியமில்லை.

9.1.2 நிகழ்நிலை முறைமையின் (Online System) ஊடாக விண்ணப்பிக்கும் போது ஆங்கில மொழியில் மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும். அதற்கமைய, குறித்த நிகழ்நிலை நிகழ்ச்சித்திட்டத்திற்குள் நுழைவதற்குப்

பின்வரும் இணைப்பைப் பயன்படுத்தி, உரிய வழிமுறைகளைப் பின்பற்றி உங்கள் விண்ணப் பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

https://ncoe.moe.gov.lk/NcoeTechApp/

9.2 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை மிகவும் கவனமாக வாசித்து, மிகவும் சரியான தரவுகளை வழங்குவதற்கான முழுப் பொறுப்பும் விண்ணப்பதாரரையே சாரும். குறிப்பாக, விண்ணப்பித்த பாடநெறிகள் தொடர் பான தகவல்கள் அல்லது ஏனைய திருத்தங்களை மேற்கொள்வதற்காகப் பின்னர் விடுக்கப்படும் கோரிக்கைகள் எக்காரணம் கொண்டும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.

9.3 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், தகைமைகள் மற்றும் வெற்றிடங் களின் எண்ணிக்கை குறித்து விசேட கவனம் செலுத்தி, ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அதிகபட்சமாக இரண்டு (02) பாடநெறிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

9.4 வர்த்தமானி அறிவித்தலின் 5.2 – 'நிரந்தர வதிவிடத்தை தீர்மானித்தல்' என்பதன் கீழ் 5.2.1 ஆம் பந்திக்குத் தொடர்புடைய மாவட்டங்களுக்கான இலக்கங்கள் பின்வருமாறு அமையும்.

- குறித்த மாவட்ட இலக்கம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தி, விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டத்திற்குரிய இலக்கத்தை மிகவும் சரியாக உள்ளீடு செய்ய வேண்டும்.

| *மாவட்டம்* | *மாவட்ட இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| கிளிநொச்சி | 11 |
| மன்னார் | 12 |
| வவுனியா | 13 |
| முல்லைத்தீவு | 14 |

| *மாவட்டம்* | *மாவட்ட இலக்கம்* |
|---|---|
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருணாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலனறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகல் | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

9.5 விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் யாதேனும் ஒரு விண்ணப்பதாரருக்கு தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி (Personal E-mail Address) இல்லை யெனில், நிகழ்நிலை முறைமையின் (Online System) ஊடாக விண்ணப்பிப்பதற்கு முன்னர் தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரியொன்றைத் தயாரித்துக்கொள்வது கட்டாயமாகும். இந்த மின்னஞ்சல் முகவரி விண்ணப்பதாரருக்குரிய தனிப் பட்ட முகவரியாக அமைந்திருத்தல் வேண்டும்.

9.6 அவ்வாறே, யாதேனும் ஒரு பாடநெறிக்கு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தகை மைகள் இல்லாது விண்ணப்பித்த பின்னர், அதன் மூலம் விண்ணப்பதாரருக்கு ஏற்படும் அசௌகரி யங்கள் குறித்து கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு எவ்விதப் பொறுப்பையும் ஏற்கமாட்டாது

9.7 ஒவ்வொரு விண்ணப்பதாரரும் நிகழ்நிலை முறைமையின் (Online System) ஊடாக விண்ணப்பித்த பின்னர், அந்த விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை அச்சிட்டுப் பெற்றுக் கொள்வதற்கான வசதி விண்ணப்ப தாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு பெற்றுக்கொள்ளப் படும் நிரந்தர அச்சுப் பிரதி (Hard Copy - PDF) தத்தம் வசம் வைத்திருக்க வேண்டும். யாதேனும் ஒரு விசாரணை அல்லது மேன்முறையீட்டை முன்வைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறித்த ஆவணத்தின் நிழற்பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இது குறித்து கவனமின்றி செயற்படுவதால் விண்ணப்பதாரருக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாகக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு எவ்விதப் பொறுப்பையும் ஏற்கமாட்டாது.

9.8 விண்ணப்பதாரர் ஒருவர் விண்ணப்பிப்பதன் மூலம் மாத்திரம் அனுமதிக்கப்படுவதற்கான தகுதி பெறமாட்டார். மேலும், அந்தந்த மாவட்ட அல்லது தேசிய அடிப்படையிலான வெற்றிடங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக மாத்திரமே ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். இது தொடர்பான இறுதித் தீர்மானம் கல்வியியல் கல்லூரி சபை/ கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

9.9 விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்படும் சான்றி தழ்கள் போலியானவை அல்லது மோசடி யானவை எனப் பின்னர் கண்டறியப்பட்டால், அவர் பாடநெறியிலிருந்து/ சேவையிலிருந்து நீக்கப் படுவதுடன், அதன் பின்னர் அரசாங்க சேவையின் எவ்வித நியமனத்தைப் பெறுவதற்கும் அவர் தகுதி யற்றவராவார்.

10.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக எழும் பிரச்சினைகள் அல்லது விசேட சந்தர்ப்பங்கள் குறித்த கல்வியியல் கல்லூரிகள் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

11.0 இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள மொழி வசனங்களுக்கும் தமிழ் அல்லது ஆங்கில மொழி வசனங்களுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில், சிங்கள மொழி மூலமான வசனமே செல்லுபடியாகும்.

நாலக களுவெவ,
செயலாளர்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்ல,
2026, ஏப்பிறல்.

2026 ஆம் ஆண்டிற்கான 2024 க.பொ.த. (உயர்தர) பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய மற்றும் மாவட்ட அடிப்படையில் தேசிய தொழில்நுட்ப கல்வியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவ பயிலுனர்களை சேர்த்தல்

| பாடத்தின் பெயர் | தேசிய அடிப்படையில் | மேல் | | | மத்திய | | | தென் | | | வடக்கு | | | | | கிழக்கு | | | மேல் வடக்கு | | வட மத்திய | | ஊவா | | சபர கமுவா | | மாவட்டம் மொத்தம் | சேகரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | கண்டி | மாத்தளை | நுவரெலியா | காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | கிளிநொச்சி | மட்டக்களப்பு | அம்பாறை | திருகோணமலை | குருணாகல் | புத்தளம் | அநுராதபுரம் | பொலன்னறுவை | பதுளை | மொணராகல் | இரத்தினபுரி | கேகாலை | | |
| பொறியியல் தொழில்நுட்பவியல் (A/Level) | 35 | 2 | 2 | 1 | 2 | 1 | 1 | 1 | 2 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 35 | 70 |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (A/Level) | 35 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 2 | 1 | 1 | 2 | 1 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 35 | 70 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (A/ Level) | 35 | 2 | 1 | 1 | 2 | 1 | 2 | 1 | 1 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 2 | 2 | 1 | 1 | 2 | 1 | 2 | 35 | 70 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| சேகரிப்பு | 105 | 6 | 4 | 4 | 5 | 4 | 4 | 4 | 4 | 4 | 5 | 3 | 4 | 3 | 3 | 4 | 4 | 4 | 5 | 4 | 5 | 4 | 4 | 5 | 4 | 5 | 105 | 210 |